[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மே 5

தகவல் உண்மையானது என்பது நிரூபிக்கப்படுகிறது. ஒருவேளை உண்மைக்கு மாறான ஒரு கருத்தை நானும் செய்தித் துறை அமைச்சரும் சொல்கிறோமோ என்ற சந்தேகம் யாருக்காவது இருந்திருக்குமானால், 27 ஆம் தேதியன்று நடராஜன் என்ற அந்த அதிகாரி அந்தப் பணத்தை எல்லாம் செலுத்தி விட்டார் என்று எதிர்க் கட்சித் துணைத் தலைவர் கூறுவதிலிருந்து நாங்கள் சொன்னது உண்மைதான் என்பது தெளிவான நிலைக்கு இன்றைகு உள்ளாகியிருக்கிறது.

அவர் என்னிடத்திலே சில ஆதாரக் கடிதங்களைக் கொடுத் திருக்கிறார். அதைப்பற்றி மேற்கொண்டு என்ன செய்ய வேண் டும் என்பதைப் பற்றியும், அவர் பதவி விலகல் கடிதம் ஏன் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற அந்த அடிப்படையையும், மீண்டும் ஏற்றுக்கொள்ளக் கூடியசூழ்நிலை இருக்கிறதா என்றஅந்த நிலையையும் நிச்சயமாக அரசு பரிசிலனை செய்யும் என்பதை நான் அந்த முதல் பிரச்சினைக்கு விளக்கமாக அளிக்கிறேன்.

அடுத்து, 15 கிராம விவசாயிகளுடைய பிரச்சினையைப் பற்றி இங்கே எடுத்துக் கூறினார்கள். 15 கிராம விவசாயி களுக்கு பொதுப் பணித் துறை அங்கே இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிற பணியின் காரணமாக தண்ணீர் வரத்து தடுக்கப் படுகிறது என்றும், அப்படி 15 கிராமங்களுக்கும் தண்ணீர் வருகிற வசதியையும் செய்து அங்கே அந்த அணையின் மூலமாக கொடுக் கக்கூடிய தண்ணீர் வாய்ப்பையும் பெறலாம் என்ற கருத்தினை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே குறிப்பிட்டிருக்கிறார் கள். அதையும் கருத்தில் கொண்டு பொதுப் பணித் துறையிடமும் மாவட்டத்திலே உள்ள பொறியாளர்களிடமும், மாவட்டஆட்சித் தலைவர் அவர்களிடமும் கலந்து ஆவன செய்யப்படும் என நான் குறிப்பிடுகிறேன். ஒருவேளை நேரிலே சென்று விசாரிக்க வேண்டுமென்ற நிலை ஏற்படுமானால் பொதுப் பணித் துறை அமைச்சரை நான் அங்கே அனுப்பத் தயாராக இருக்கிறேன். அப்பொழுதும் நீங்கள் கருப்புக் கொடி காட்டுவீர்கள். இருந் தாலும் அனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறேன்.

(முற்பகல் 10.20)

4. கவன ஈர்ப்பு.

(அ) ஓசூர் வட்டத்தில் சில கிராமங்களில் சாகுபடி நிலங்களிலிருந்து மக்களை வெளியேற்ற வனத்துறை நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சோ. அழகர் சாமி, ஜி. பழனிச்சாமி, ரெ. பிச்சைமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு இந்து சமய-அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

1989 மே 5]

திரு. ஜி. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், ஒசூரில் பசாநத்தம், குறிஞ்சிப் பட்டி, சித்தாரிபாளையம், கொட்டாயூர், கோதும்மனபள்ளி ஆகிய கிராமங்களில் 60 ஆண்டுகளுக்கு மேலாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களிடத்திலே குறிப்பு கைவசம் இல்லையா? நான் படிக்கட்டுமா? உங்கள் சார்பிலே சொல்கிறேன். தர்மபுரி மாவட்டம், ஒசூர் வட்டத்திலுள்ள பல கிராம மக்கள் அறுபது வருடங்களாக சாகுபடி செய்து வந்த நிலங்களை "Reserved forest" என அறிவித்து அவர்களை வனத்துறையினர் வெளியேற்ற முயலுவதால் அப்பகுதி மக்களுக்கு ஏற்படும் இன்னல் குறித்து தாங்கள் என் மூலமாக அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறீர்கள்.

*மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

அறிக்கை.

மேற்படி கிராமங்கள் யாவும் கும்பளம் காப்புக் காட்டைச் சுற்றியுள்ள பகுதியாகும்.

வனச் சட்டம் பிரிவு 4-ன் கீழ் அரசு ஆணை எண் 68, வனம் மற்றும் மீன் துறை, நாள் 3–2–1978-ன்படி அறிவிக்கப்பட்டது.

பிரிவு 6-ன் கீழ் கிருஷ்ணகிரி வன நிர்ணய அலுவலரால் 25–5–1978-ல் அறிவிக்கை செய்யப்பட்டது. ஆக்கிரமிப்பு தாரர்களுக்கு நோட்டீசு கொடுத்து, வன நிர்ணய அலுவலர் விசாரணை செய்து ஆக்கிரமிப்புதாரர்கள் போதிய ஆதாரங்கள் காட்டாததால், ஆக்கிரமிப்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

தமிழ்நாடு வனச்சட்டம், 1882, பிரிவு 16-ன் அறிவிக்கையின் படி 9–6–1982 முதல் "காப்புக் காடாக" அறிவிக்கை செய்யப் பட்டது.

ஆக்கிரமிப்புதாரர்கள் கிருஷ்ணகிரி மாவட்ட நீதிமன்றத்தில் முறையீடு செய்து, தள்ளுபடி செய்யப்பட்டது.

நில நிர்வாகம் தனி ஆணையர் அவர்களுக்கு முறையீடு செய் தும், தள்ளுபடி செய்யப்பட்டது.

காப்புக் காடாக இருப்பதால் 1980 மத்திய வன (பாதுகாப்பு) சட்டம் இதற்கும் பொருந்தும். மத்திய அரசு அனுமதியின்றி இப்பகுதியை வன உபயோகம் அல்லாத வேறு காரணங்களுக்கு பயன்படுத்த இயலாது.

இவர்களுடைய துயர் நீக்க, இவர்களுக்கு வேறு இடத்தில் புறம்போக்கு நிலம் வழங்க வருவாய்த் துறையை கலந்து ஆலோசிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா, இதை நீங்களே கேட்க வேண்டும். (சிரிப்பு).

திரு. ஜி. பழனிச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் 60 ஆண்டுக்காலமாக அங்கே குடியிருந்திருக்கிறார்கள். 60 ஆண்டுகளுக்கு முன்பாக அந்த இடம் எப்படிப்பட்ட இடம் என்பது அவர்களுக்குத் தெரியாது. அங்கு இருக்கக்கூடிய குடும்பங்கள் 60 ஆண்டு காலம் குழந்தை குட்டிகளோடு அந்த இடத்தை சீர் செய்து விவசாயம் செய்து அதில் வரக்கூடிய வருமானத்தை வைத்து தங்களுடைய குடும்பத்தை நடத்தி வந்து கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்தை இந்தத் தினத்திலே அவர்களை காலி செய்வதற்கு ரிசர்வ் பாரஸ்ட் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை காலி செய்தால், அந்தப் பகுதி மக்கள் அதிலிருந்து வெளியேற வேண்டும் என்று சொன்னால், அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கும், குடியிருப்பதற்கும் மிகச் சிரமம் ஏற்படும். ஆகையால் அவர்கள் பலதடவை அரசுக்கு மனுப் போட்டு அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்காமல் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். கோர்ட்டிலேயும் அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆகையால் அவர்களுக்கே அந்த இடத்தைக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும். அரசு தரப்பிலே வேறு இடத்தை தருவதாகவும், அதற்கு அரசு பரிசீலிப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு வேறு வழி இல்லாத இந்தச் சூழ்நிலையில் அரசு அந்த இடத்தை அவர்கள் வாங்குவதற்கு வாய்ப்பு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, இந்தப் பகுதி 1978 ஆவது ஆண்டிலே தொடங்கி பாதுகாக்கப்பட்ட காடாக, ரிசர்வ் ஃபாரஸ்ட் என்ற அளவிலே இதை எடுத்துக் கொள்வதற்கு 1978 ஆவது ஆண்டிலே உத்திரவுகளை எல்லாம் போட்டு அந்த வேலை தொடங்கி 1982 ஆவது ஆண்டிலே அது முடிக்கப்பட்டு விட்டது. 1982 ஆவது ஆண்டிலிருந்து அது ரிசர்வ் ஃபாரஸ்ட். ஆகவே இனிமேல் அந்த இடத்தை வன மேம்பாட்டுப் பணிகளைத் தவிர வேறு ஏதாவது காரியங்களுக்காக கொடுக்க வேண்டுமானால் மத்திய அரசினுடைய அனுமதி இல்லாமல் செய்ய முடியாது. ஆகவே அங்கே வாழ்கின்ற அந்த ஏழை மக்களுடைய வசதியினையும் கவனத்திலே கொண்டு அரசு வேறு புறம்போக்கு நிலத்தை கொடுக்க முடியுமா என்பதை நாம் ஆராய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

திரு. ஏ. பிச்சைமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, 60 ஆண்டு காலம் அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் பின்தங்கிய மக்கள். குறிப்பாக ஆதி திராவிட மக்கள். 60 ஆண்டுகளுக்கு முன்பு அந்த நிலம் எப்படி இருந்திருக்கும்—ஆகவே அதை இன்று நல்ல முறையில் சீர்திருத்தம் செய்து 60 ஆண்டுக் காலம் பயிர் செய்து வந்த அந்த ஏழை எளிய மக்களுக்கே அரசு கருணை கூர்ந்து அதை வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு, அந்த நிலத்தை அரசு அவர்களுக்கே வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, ஏற்கெனவே பாதுகாக்கப்பட்ட காடாக அறிவிக்கப்பட்டு விட்ட காரணத்தினாலே இப்போது இந்த அரசு தன்னிச்சையாக எதையும் செய்ய முடியாது. மத்திய அரசினுடைய அனுமதி பெற்றுத்தான் இனிமேல் அந்த இடத்தைக் கொடுக்க வேண்டு மானால் கொடுக்க முடியும். ஆகவே மத்திய அரசு நிச்சயமாக —இங்கே தமிழ்நாட்டிலே காடுகள் எந்த அளவிற்கு இருக்க வேண்டுமோ—33 சதவீதம் என்று சொல்லப்படுகிறதே—அந்த அளவுக்கு இல்லை. ஆண்டுதோறும் ஏறத்தாழ 25,000 ஏக்கர் காடுகள் ஆக்கப்பட வேண்டும் என்று கொள்கையை வைத்து, எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே 1982 இலே இந்தக் காரியம் முடிந்து விட்டது. ஆகவே, இனி மாநில அரசு தன்னிச்சையாக இதிலே எதையும் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) எண்ணூர், திருவொற்றியூர் பகுதிகளில் கடல் அரிப்பால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் டி. கே. பழனிச்சாமி செங்கை சிவம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. டி. கே. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை, எண்ணூர், திருவொற்றியூர் பகுதிகளில் கடல் அரிப்பால் சாலைகள், மனைகள் மற்றும் வீடுகள் பாதிப்பதால் அப் பகுதியிலுள்ள மக்களின் உயிருக்கு ஏற்பட்டிருக்கும் அபாயம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—